factured there. May I know from the Hon. Minister whether it is a fact and whether he had occasion to know it during one of his visits to that place?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சைக்கிள் அஸெம்பளிங் யூனிட், இது போன்ற பெரிய கம்பனிகளோடு சிறிய தொழிற்சாலைகள் போட்டியிட முடிய வில்லை என்பதும் உண்மை. அரசாங்கத்தின் சார்பில் நடத்தப்படுகிற அஸெம்பளிங் செக்ஷன்கூட நஷ்டத்தில் இருப்பதும் உண்மை.

Industrial Training Institute, Hosur.

* 175 Q.—THIRU B. VENKATASWAMY: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there is any proposal to introduce radio mechanism course in the Industrial Training Institute, Hosur; and

(b) if so, from when?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

THIRU B. VENKATASWAMY: Sir, there is a large demand for radio mechanism course all over the State especially in the Hosur taluk and people are willing to take to that course. So, will the Hon. Minister introduce that course in the State? Also television is being introduced in India and there is also a large demand for it. So, may I know from the Hon. Minister whether he will introduce this kind of mechanism in all the Industrial Training Institutes of Tamil Nadu especially in the Hosur taluk?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஓசூர் ஐ.டி.ஐ.-யில் 1973-74 ஆண்டில் எலெக்டிரிஷியன் என்ற ஒரு புதிய கோர்ஸ் சுமார் ரூ. 42,200 செலவில் தொடங்குவதற்கு அரசாங்கம் முடிவு செய்து இருக்கிறது. ரேடியோ மெகானிசம் கோர்ஸ் தேவை என்று அரசாங்கம் தற்போது கருதுகிறது. இப்போது நான்கு ஐ.டி.ஐ.-யில்—அதாவது அம்பத்தூர், கோயம்புத்தூர் இன்டஸ்டிரியல் டிரெயினிங் இன்ஸ்டிடியூட்களிலும், இன்டஸ்டிரியல் டிரெயினிங் சென்டர் பார் விமன், சென்னை, இன்டஸ்டிரியல் டிரெயினிங் சென்டர், தேனியி லும்—ரேடியோ மெகானிசம் கோர்ஸ் இருக்கிறது. வேறு இடங்களில் இதை மறுபடியும் டைவர்சிபிகேஷன் கொண்டு வரலாமா என்பது பற்றியும் நம் முடைய அரசாங்கம் தற்போது பரிசீலித்து வருகிறது.

THIRU B. VENKATASWAMY : There is a great demand for Radio Supervisors in Bangalore. So may I know from the Hon. Minister, since most of the people trained in Industrial Training Institutes are unemployed, whether he would introduce this course in Industrial Training Institute, Hosur, so that many people will be benefitted ?

THE HON. THIRU S. MADHAVAN : I have already explained that this course of 'electrician' is being introduced in Industrial Training Institute, Hosur. It will be implemented in 1973–74. In the Fifth Five-Year Plan, we are going to examine the introduction of 'Radio Mechanism' Course in some other Industrial Training Institutes. We are already having this course in four Industrial Training Institutes in our State.

கைதிகளுக்கு பள்ளிப் படிப்பு

*176. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய சிறைச்சாலைகளில் கல்வி பயில விரும்பும் நீண்டகால கைதிகளுக்குச் சிறைச்சாலைகளில் பள்ளிகளை நிறுவும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை. எல்லா மத்திய சிறைச்சாலைகளிலும் ஆரம்பப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. மற்றும் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) அல்லது தமிழாசிரியர் தேர்வுகள் எழுத விரும்பும் கைதிகளுக்குச் சிறைப் பள்ளிகளில் அலுவல் புரியும் ஆசிரியர்களைக் கொண்டும் சிறைச்சாலையின் பட்டதாரி அதிகாரிகளைக் கொண்டும், சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், தேர்வுக் கட்டணம் ஆகியவைகள் அரசு செலவில் வழங்கப்பட்டு அதைச் சார்ந்த மற்ற செலவினங்களையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. ஒவ்வொரு சிறைச்சாலையிலும் எல்லா மொழிகளிலுமாக ஏறக்குறைய 10,000 நூல்கள் கொண்டு நூலகமும், கைதிகளின் கல்வி அறிவையும் பொது அறிவையும் வளர்க்க வேலூர் மத்திய சிறைச் சாலையில் இரவுப் பள்ளி ஒன்றும் இயங்கி வருகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் துவக்கப் பள்ளிகள் மத்திய சிறைச்சாலையில் நிறுவுவதாகச் சொன்னார்கள். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில், நீண்டகாலக் கைதிகளுக்கு அத்தகைய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன் வருமா? 1967-க்கு முன்னால்